1 செங்கற்பட்டு ஓலை ஆவணங்கள்

செங்கற்பட்டு ஓலை ஆவணங்கள் என்பன செங்கற்பட்டுப் பகுதியைப் பற்றிய கிராமக் கணக்குகளைக் கொண்ட ஓலை ஆவணங்கள் ஆகும். அண்மையில் செங்கற்பட்டு மாவட்ட ஆட்சியரின் பதிவு அறையினின்று தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச் சுவடித்துறைக்கு இவை கிடைத்தன. இவை மூன்றடிக்கும் மேற்பட்ட நீளத்தில் அமைந்தன. 160 பெருஞ்சுருணைக் கட்டுகளாகக் காணப்படும் இவை ஒவ்வொரு சுருணையிலும் 1000த்துக்கும் மேற்பட்ட ஓலைகளைக் கொண்டிருக்கின்றன. செங்கற்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தினின்று கிடைத்தமையாலும் செங்கற்பட்டுப் பகுதியைப் பற்றிய செய்திகளைத் தாங்கியிருப்பவை என்பதாலும் இவ்வோலை ஆவணங்கள் செங்கற்பட்டு ஆவணங்கள் எனப் பெயரிடப்பட்டன.

இவ்வோலை ஆவணங்கள் கி.பி. 1760 முதல் கி.பி.1860 வரையிலான காலத்தைச் சேர்ந்தவை. ஒரு மீட்டர் நீளமும் ஓர் அங்குல அகலமும் கொண்ட இவ்வோலைகள் இருபுறமும் எழுதப்பட்டுக் கோவையாக்கிச் சுருட்டப்பட்ட சுருணைகளாகக் காட்சியளிக்கின்றன. அவற்றில் சுமார் 20 சுருணைகள் கி.பி. 1767 இல் செங்கற்பட்டுப் பகுதியில் ஆங்கிலேயர் மேற்கொண்ட பெர்னார்டு சர்வே (Barnard Survey) எனும் கணக்கெடுப்பிற்குப் பயன்படுத்தப்பட்டவை என்ற வகையில் வரலாற்றுச் சிறப்பு மிக்கவை.

செங்கற்பட்டு வட்ட வரலாறு

சென்னை நகரைச் சுற்றி அமைந்திருக்கும் செங்கற்பட்டு மாவட்டம் சுமார் 180 கி.மீ. நீளமும் 80 கி.மீ. அகலமும் கொண்ட ஒரு அகன்ற வளைவுபோல் காட்சியளிக்கும் பகுதியாகும்.

இப்பகுதி ஆங்கிலேயர் ஆதிக்கத்திற்கு அடித்தளமாக விளங்கிய பகுதியாகும். பல்லவர் காலந்தொட்டு ஆங்கிலேயர் வருகை வரை பல்வேறு அரசுகள் இங்கு ஆட்சிபுரிந்து வந்தன.

கி.பி. 9ஆம் நூற்றாண்டு முடிய பல்லவப் பேரரசின் ஒரு பகுதியாக விளங்கியது. செங்கற்பட்டில் அமைந்துள்ள காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு பல்லவர்கள் ஆட்சிபுரிந்து வந்தனர். அதன் பின் சோழர் (13ஆம் நூற்றாண்டு



செங்கல்பட்டு மாவட்ட வரைபடம்

முடிய), தொடர்ந்து சம்புவராயர் (14ஆம் நூற்றாண்டு), விஜயநகர அரசர் (15-16ஆம் நூற்றாண்டு) ஆகியோர் ஆண்டனர்.

கி.பி. 1639ல் சந்திரகிரி மூன்றாம் ஸ்ரீரங்கராயர் என்பவரால் ஆங்கிலேயருக்கு இன்று செயிண்ட் ஜார்ஜ் கோட்டை அமைந்துள்ள இடம் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. இதன்பிறகு இந்தியாவின் வடகிழக்குப் பகுதி முழுவதும் கோல்கொண்டா சுல்தான்களால் கைப்பற்றப்பட்டது. இவர்களின்கீழ் சிற்றரசர்களாக விளங்கிய நாயக்கர்கள் செங்கற்பட்டுப் பகுதியை ஆண்டுவந்தனர். கி.பி.1687ல் கோல்கொண்டா வீழ்ச்சிக்குப் பிறகு செங்கற்பட்டு மற்ற கர்நாடகப் போர்களில் செங்கற்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் அவற்றைச் சுற்றியமைந்திருந்த நகரங்களும், கிராமங்களும் அடுத்தடுத்து தாக்குதலுக்கு உட்பட்டன. அச்சமயம் இப்பகுதியை ஆண்ட நவாப் வாலாஜா என்றழைக்கப்பட்ட ஆற்காடு நவாப் முகமது அலி பிரஞ்சுக்காரர்களுடன் தமக்கு ஏற்பட்ட போரில் துணை புரிந்தமைக்காக செங்கற்பட்டுப் பகுதியை ஆங்கிலேயருக்கு அன்பளிப்பாக வழங்கிவிட்டு, ஆங்கிலேயருக்குக் கப்பம் செலுத்திக்கொண்டு பெயரளவிற்கு ஆட்சி செய்துவந்தார். இவ்வன்பளிப்பு கி.பி.1765ல் தில்லியை ஆண்ட முகலாய மன்னர் ஷாஆலம் அவர்களால் முறைப்படி உறுதிப்படுத்தப்பட்டது. அதுமுதல் இப்பகுதி 'இனாம் நிலங்கள்' அல்லது 'ஜாகீர்' என ஆங்கிலேயரால் குறிக்கப்பெற்றது.

பெர்னார்டு கணக்கெடுப்பு

செயிண்ட் ஜார்ஜ் கோட்டையைச் சுற்றிலும் மூன்று புறங்களிலும் அமைந்திருந்த இந்த ஜாகீர் நிலப்பகுதி ஆங்கிலேயருக்கு போர் முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்கியது. இப்பகுதியைத் தம் முழுமையான ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவருவதற்கு முன்பாக இப்பகுதியின் மதிப்பையும் வருவாயையும் அறியும்பொருட்டு ஆங்கிலேயர் நில அளவை தொடர்பான விரிவான கணக்கெடுப்பு ஒன்றை மேற்கொண்டனர். கி.பி.1767 முதல் கி.பி.1774 வரை நடைபெற்ற இக்கணக்கெடுப்பு தாமஸ் பெர்னார்டு (Thomas Barnard) எனும் ஆங்கிலேய பொறியியல் வல்லுநரால் கர்னல் கால் எனும் தலைமைப் பொறியியல் வல்லுநர் மற்றும் மேல் அதிகாரிகளின் சொற்படி மேற்கொள்ளப் பெற்றது. இக்கணக்கெடுப்பு பெர்னார்டு சர்வே எனவும் இதன் வாயிலாக பெறப்பட்ட கணக்குகள் பெர்னார்டு கணக்குகள் (Barnard Survey Accounts) எனவும் குறிக்கப் பெறுகின்றன. இக்கணக்கெடுப்பிற்குப் பயன்படுத்தப்பட்ட மூலச் சான்றுகளே செங்கற்பட்டு ஓலை ஆவணங்கள்.

அடிப்படையில் வருவாய் பற்றிய கிராம கணக்குக் குறிப்புகளான செங்கற்பட்டு ஆவணங்கள் சுமார் 2100 கிராமங்களுக்கான தகவல் தரவுகளை உள்ளடக்கியவை. இந்த ஆவணங்கள் ஒவ்வொரு கிராம நிலத்தின் தரம், கிராம சமுதாயம், குடியிருப்புப் பகுதி, சாகுபடி, மகசூல், மானியம், தீர்வை, பல்வேறு இன மக்கள், அவர்தம் தொழில்கள் போன்ற பல்வேறுவித சமூகப் பொருளியல் செய்திகளை விரிவாகத் தருகின்றன. இவற்றின் வாயிலாக கிடைக்கப்பெற்ற செய்திகளின் சுருக்கம் ஒரு குறிப்பிட்ட வடிவில் மொழி பெயர்க்கப்பட்டு கிழக்கிந்திய கம்பெனியரால் லண்டனுக்கு அனுப்பப்பட்டன.


Wuddacaput

6125 Tanks &c.
30 - Muddoor
100 - A part of Corroovamode Yary
110 - Yary
35 - Hill
40 - Wood
21 - Town
8 - Parcherry & buryeng g.
40 - Paddy } old freeg } Village
2550 Combo } Lands } Establisht.
550 Paddy } old D. } The property
150 Combo } } of strangers
650 Paddy new D.
4450 Paddy } Cultivated } Circar
190 - Combo }
200 - Paddy } Uncultiv. } Ground
3625 Combo }
1360

Particulars of old freeg. Lands belong. to the Village Establt.
Permol Pagoda Paddy . 50 Combo
Eashwaran D. . . 50
Poolias D. . 25
Vailhaverly Braminy 1 .
Landholders 8 .
Panjangam Bram. . 50
Poligar . . 8 . 7 50
Tallear 4 50 2 50
Conicoply . . 8 . 4 .
Shroff . . 2 . 3 .
Artificers . 2 . 6 .
Barber . . 50
Panisever . . 50 . 50
Cornmeter 3 75 2 .
40 . 25 50

Particulars of old freeg. Lands the property of Strangers
Chakeer Paddy 4 - Combo 1 -
Tope fund . . . 50
Washerman . . . 50
Snake Doctor . . . 50
Potmaker . . 50
5 50 1 50

Particulars of new freeg. Lands the property of Strangers
Narasingacharia
Braminy of Agoblu given by y Renter 1761 1 .
Conegoo of the District given by y Renter 1744 4 .
Choultry fund given by y Renter in 1763 - 1 .
Village Servant given by the Renter in 1761 . 50
6 50

Landholders in Bram...
Siva Braminy, Veera Pandar, Peerecolum velee, Conicoplys, Cowkeeper, Tallear, Pally, Weavers, Chetties, Carpenters, Ironsmith, Shroff, Potmaker, Oil seller, Wooden..., Watchm..., Panisev..., Washe..., Barber, Moor..., Parias

The different shares of the Corn produce are four, 1 One for the Braminy & inhabitants residing in the Village on all Paddy grounds that are wat... Yary by Channels and thro' out the Year. 2 Another for the above Landholders on ... that are watered from the Yary by Pekolas, and on all Combo grounds in both the ... 3 Another for the Farmers residing in the Village on all Paddy grounds that a... the Yary by Channels and thro' out the Year. 4 And the other for the ... all Combo grounds and thro' out the Year.

Cultn. ... 1 Share
35 of 2 Cultivators neat Share
45 8 Circars D.
1310 { Dues pd. half by y Circar & half by the Cultivators
211 Dues pd. by Circar alone
100 ...
2 Share
42 1 Cultivators neat Share
39 12 Circars D.
3 Share
37 10 4 Cultivators D.
43 36 Circars D.
4 Share
46 3 Cultivators D.
34 ... Circars D.
7 54 Dues pd. previous to Treading the Corn
211 Dues pd. previous to Measuring the Corn

Particulars of dues pd. half by the Circar & half by y Cultivators
Cultivators Servants . 6 11 6
Tirekel koonum Pagoda . 11 5
Conjeveram D. . 11 5
Chingapermol D. . 5 6
Terekelckoor D. . 5 7
Conigo of the District . 11 5
Daishmooc D. 11 12
Dovelraw . 5 2
Yary fund 27 2
15 10 -

Particulars of dues pd. by y Circar alone
Poligar 19 3
Conicoply . 10 6
Shroff . 3 5
21 1 6

Landholders Shares
Kistnoo Bramies 130 fixed ...

Particulars of dues pd. previous to Treading the Corn
Permol & Eashwaran Pags. . 3 -
Omnun Padari D. . 3 -
Vailhaverly Braminy . 4 4
Panjangum D. . 1 4
Artificers . 1 .
Shroff . 3 -
Tope Pandarum . 3 -
Yary servant . 6 -
Cornmeter . 9 -
Snake Doctor . 3 -
Cowkeeper . 3 .
Potmaker . 3 -
Waterwoman . 1 4
Washerman . 3 -
Barber . 3 .
Panisever . 3 .
Cultivators servants 13 -
Conicoply . 10 .
75 4

Particu... Measurem...
Permol & Eas..., Poolias, Omnun Pa..., Vailhaverly ..., Vishnoo, Panjangum, Landholders, Conicoply, Tallear, Shroff, Artificers, Cornmeter, Yary Servant, Tope Pandar..., Cowkeeper, Snake Doctor, Oil seller, Waterwoman, Potmaker, Chakeer, Washerman, Barber, Panisever

Acct. of Repairs necessary for the Yary
Nth. of y South bank to be repd. 10 Deep 15 Broad 61 Long feet 305 Pags.
To face the above bank with Stone 10 Deep 61 D. 400 D.
To Build 2 new Stone gratings or Passage for the water from the Yary when danger of overflowing 200 D.
To Erect 2 new Sluices 80 D.
100 Pag. to be advanced the Inhabitants 985 ...

Advantages accruing from ...
200 Cawl of Uncultd. Padd. ... 26 ...
30 D. D. Combo D. D. 2 ...
400 D. of Cultivd. Padd. D. ...
@ 36 Cul. ... Pagoda 2006 Pagod...
Poligar Mongean Peddana...
Madras ... 9 ... 1761

barnard Account

இந்த ஆவணங்களைப் பற்றி திரு. பெர்னார்டு அவர்கள் செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலிருந்து கவுன்சிலின் ஆளுநருக்கு எழுதிய கடிதத்தில் (Letter to the Governor - in Council at Fort St. George, dt. 10th November 1774) குறிப்பிட்டுள்ளார்.

'நாட்டின் நிலை மற்றும் மேற்கொள்ளவேண்டிய சீர்திருத்தங்கள் பற்றிய ஆய்வினை மேற்கொள்ள ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள ஆவணங்கள் எனக்கு உதவின. அந்த ஆவணங்கள் வருவாய், உற்பத்தி, வாணிபம் தொடர்பானவை. முதலில் கர்னல். கால் அவர்கள் என்னை அனுப்பியபொழுது இதுபோன்ற ஆவணங்கள் இருப்பதை அறியவில்லை. கால் அவர்களால் அமர்த்தப்பட்ட மொழிபெயர்ப்பாளர் வாயிலாக இவற்றைப் பற்றிய தெளிவான விவரங்களை அறிந்துகொண்டேன். இந்த ஆவணங்களிலிருந்து பெறப்பட்ட செய்திகளின் தொகுப்பு ஒவ்வொரு கிராமத்தின் நிலப்பிரிவு, நிலப்பயன்பாடு, மொத்தக் குடியிருப்பு, மக்களின் உடைமை, சிறப்புரிமைகள், கால்நடைகள் பற்றியவை. வருவாய்க் கணக்குகள், ஒவ்வொரு கிராமத்தின் மொத்த மகசூலும் தோஸ்த் அலி காலத்தில் நிர்ணயம் செய்யப்பட்ட தீர்வை விகிதாச்சாரப்படி பிரிக்கப்பட்டதைப் பற்றிக் கூறுகின்றன. சில இடங்களில் தோஸ்த் அலி, சப்தர் அலி காலத்திய கணக்குகளும் கிடைக்கப்பெற்றேன். ஆனால் இதுபோன்ற வாய்ப்புகள் அடிக்கடி கிடைக்கவில்லை...... இவ்விவரங்கள் அனைத்தும் திரு.ஜுவல் கால் அவர்களின் பொறுப்பில் மொழிபெயர்ப்பு செய்யப்படவிருக்கின்றன. என்னிடம் வேலைக்குச் சேர்ந்தது முதல் இவரது கவனமும் செயல்திறனும் பாராட்டுக்கு உரியதாக உள்ளது'.

பெர்னார்டு கணக்கெடுப்பின் வாயிலாகப் பெறப்பட்ட கணக்கு சென்னை ஆவணக் காப்பகத்தில் பாதுக்காக்கப்பட்டு வருகின்றது. 'Board of Revenue Miscellaneous Series' எனும் பிரிவில் 40 தொகுதிகளும் 'Chinglepet District Record Series' எனும் பிரிவில் 10 தொகுதிகளும் ஆக 50 தொகுதிகளில் இந்த ஆய்வு பற்றிய தகவல்கள் காணக்கிடைக்கின்றன. இந்த ஆவணங்களில் பல 'ஆளுநர் கவுன்சிலின் நடவடிக்கைகளில்' எடுத்தாளப்பட்டிருக்கின்றன.

பெர்னார்டு கணக்கெடுப்பில் சுமார் 2100 கிராமங்கள் அடங்குகின்றன. ஆங்கிலேயருக்கு ஜாகீராக கொடுக்கப்பட்ட செங்கற்பட்டுப் பகுதி பல சீமைகளாகவும், மாகாணங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. இக்கணக்கெடுப்பு பின்வரும் 15 சீமைகளுக்கான தகவல் தரவுகளை உள்ளடக்கியவை.

கோவளம்

செங்கற்பட்டு, திருக்கழுக்குன்றம்

காவாந்தண்டலம்

சின்ன காஞ்சிபுரம், பெரிய காஞ்சிபுரம்

மணிமங்கலம்

உத்திர மேரூர்

பெரியபாளையம்

பூந்தமல்லி

பொன்னேரி

சாலப்பாக்கம்

சாத்து மாகாணம்

திருப்பாச்சூர்

கருங்குழி

பேரம்பாக்கம்

ஶ்ரீஹரி கோட்டா

இப்பதினைந்து சீமைகளும் மேலும் சுமார் 250 மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன. இப்பிரிவுகள் தொண்டை மண்டலத்தின் மரபுவழி பிரிவுகளான கோட்டம், நாடு போன்றவற்றோடு கருதத் தக்கவை. இனி இவ்வோலை ஆவணங்களைக் காண்போம்.

ஆங்கிலேயர் ஆட்சிக்கு முற்பட்ட செங்கற்பட்டு பகுதியின் சமூகப் பொருளியல் நிலைகளை ஆராய உதவும் இவ்வரிய ஆவணங்களை முறையாகப் படித்துணர்வதற்கு அவற்றின் எழுத்துமுறை, மொழிநடை அவற்றில் இடம்பெறும் குறியீடுகள் போன்றவை பற்றியறிதல் அவசியமாகிறது.

ஓலையில் எழுதப்பட்டுள்ள விதம்

செங்கற்பட்டு ஓலை ஆவணங்கள் ஒற்றையாகவும், நறுக்கிப் பதப்படுத்தப் படாததுமாகிய நீள ஓலைகளில் இருபுறமும் எழுதப்பட்டுக் காணப்படுகின்றன. நாட்டுப்பனை மடல்களிலிருந்து தனித் தனியாகக் கிழிக்கப்பட்ட முழு ஓலைகளை அப்படியே பயன்படுத்தியுள்ள சூழலை இவ்வாவணங்களில் காணமுடிகிறது. பொதுவாக ஒரு பக்கத்திற்குச் சுமார் பத்து வரிகளைக் கொண்டு விளங்குகின்றன. ஓலையின் தொடக்கம் முதல் நுனி வரை மூன்று அடி நீளத்துக்கும் எழுதப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு வாக்கியமும் நீள வாக்கில் எழுதப்படாமல் ஒன்றன்பின் ஒன்றாகக் கட்டம் கட்டமாக நிரலணி பத்தியமைப்பில் (Column) பின்வருமாறு எழுதப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது.



பொதுவாக, ஓலைச் சுவடிகள் பனை மடல்களிலிருந்து கிழித்து எடுக்கப்பட்ட



ஓலையின் எழுத்துக்கள்



கோடம்பாக்கம், சிங்கப்பெருமாள் கோவில் ஏடுகள்

தனி ஓலைகளாக இருபுறமும் வெட்டப்பெற்று அகலம் ஒரே அளவினதாக அமையுமாறு இடையில் ஒரு துளையோ அல்லது இரு துளையோ இடப்பெற்று எழுதுவதற்குச் சமபரப்பு வருமாறு பதப்படுத்தப்பெற்று அழகுற தயாரிக்கப்பெறும். கூடுதலான நீள அளவைக் கொண்ட ஆவண ஓலைகள் கூட முத்திரைத்தாள் போன்று அரசாங்க விற்பனையில் வரும்போது மேற்கண்டவாறே பதப்படுத்தப்பட்டிருக்கும்.

செங்கற்பட்டு ஓலை ஆவணங்களோ முற்றிலும் மாறுபட்ட நிலையில் 'கச்சா' நிலையிலேயே காணப்படுவது குறிப்பிடத் தகுந்ததாகும். குறிப்பாக ஓலையின் இரு ஓரங்களும் அரை செ.மீ. அளவுகூட இல்லாத முனையில் அமைந்திருப்பது சுட்டத்தகுவதாம்.

ஓலையில் செய்தியை ஒரே நீளமாக எழுதிக்கொண்டு சென்றால் அவற்றைப் படிப்பதற்கு அயர்ச்சி தோன்றுதல் கூடும். எழுதியபிறகு அவற்றைப் படிப்பதற்கும் கடினமாகவே தோன்றும். அவ்வாறன்றி செங்கற்பட்டு ஆவணங்களில் ஒரு தொடரைப் பத்தி போல ஒன்றன்பின் ஒன்றாக எழுதிச் சென்றிருத்தல் சிறப்பாகக் கருதத்தக்கது. இம்முறை இன்று அகராதிகள், களஞ்சியங்கள், பத்திரிகைகள் போன்றவற்றில் எழுதப்பட்டிருக்கும் நிரலணி பத்தியமைப்பு முறையை நினைவு படுத்துவதாக உள்ளது.

பொதுவாக ஓலை ஆவணங்கள் படிப்பதற்குக் கடினமாக சங்கிலித் தொடராக, வீச்செழுத்திலேயே எழுதப்பட்டிருக்கும். ஆயின், செங்கற்பட்டு ஆவணங்களில் காணப்படும் செய்திகள் சங்கிலித் தொடராக இல்லாமல் தனித்தனியே கோவையின்றி அமைந்திருந்தது குறிப்பிடத் தகுந்ததாகும். இது படிப்பதற்கும் புரிந்து கொள்வதற்கும் எளிமையாக காணப்படுவதாகக் கொள்ளலாம்.

தலைப்பு ஏட்டில் ஒவ்வொரு கிராமத்தின் பெயர், அவை அமைந்துள்ள சீமை, மாகாணம், ஆவணம் எழுதப்பட்ட தேதி, அந்த ஆவணம் எதற்காக தயாரிக்கப்பட்டது போன்ற முழு விபரங்கள் முறையே எழுதப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு ஏட்டிற்கும் இன்று நாம் எழுதுவதுபோல பக்க எண்கள் கொடுக்கப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது. ஆயின், பக்கங்களுக்குத் தனித்தனி எண் சுட்டாமல் ஏடுகளுக்கு மட்டுமே எண் கொடுக்கப்பட்டிருப்பது சுவடியின் தனி அமைப்பாகும். அதாவது இரண்டு பக்கங்களுக்கு ஒரு எண் கொடுக்கப்பட்டிருக்கும். இது ஏட்டெண் எனப்படும்.

இது நடுவில் ஓலைகள் விடுபட்டிருந்தால் அவற்றைக் கண்டுபிடிப்பதற்கு ஏதுவாகவும் உள்ள சிறந்த பதிவமைப்பாகக் கருதமுடியும்.

மேலும் ஒவ்வொரு ஏட்டிலும் தொடர்ச்சியைக் குறிக்கும் விதமாக 'மு-ஏ' முதல் ஏட்டுக்கு) என்று எழுதப்பட்டிருப்பது சிறப்பாகக் கருதத்தக்கது. இது இன்று நாம் எழுதும் பொழுது "P..T.O', "Contd,' "....2 ....3' என்று ஏட்டின் முடிவில் எழுதுவதை நினைவு படுத்துவதாக உள்ளது. ஒவ்வொரு கிராமக் கணக்கும் முடியும்பொழுது அது யாரால் எழுதப்பட்டது என்பதைக் குறிக்கும்விதமாக 'ஊர்கணக்கு வேதகிரி கையெழுத்து' என்றவாறு கையொப்பமிடப்பட்டுள்ளது. இத்தகு நிறைவுக் குறிப்புகள் இன்று அலுவலகக் கோப்புகள், கடிதங்களில் பெயர் மற்றும் பதவியுடன் (*Designation*) கையொப்பமிடுவது போலவே காட்சியளிக்கின்றன.

ஆவணத்தின் மொழி நடை

இந்த ஆவணங்கள் அனைத்தும் ஆவணங்களுக்கென்றே அமைந்திருந்த ஒரு தனி மொழி நடையில் அமைந்திருக்கின்றன. இவற்றில் காணக் கிடைக்கும் கையொப்பங்களிலிருந்து இவை ஊர்க்கணக்கர்களால் எழுதப்பட்டிருப்பது தெரியவருகிறது. ஆயின், தொழில்முறை எழுத்தர்களால் அவை எழுதப்பட்டு உரிய கணக்கர்களால் கையொப்பமிடப்பட்ட சூழலும் இருத்தல் வேண்டும். இவற்றுடன் குமாஸ்த்தா, நாட்டார் போன்றோரின் கையொப்பங்களும் சில ஆவணங்களில் காணப்படுவதிலிருந்து இவை ஊர்க்கணக்கர்களால் எழுதப்பட்டு குமாஸ்த்தா, நாட்டார் போன்ற அலுவலர்களால் மேற்பார்வையிடப் பெற்று கையொப்பமிடப்பட்டுள்ளது தெரிகிறது.

இந்த ஆவணங்கள் பல மாகாணங்களையும் ஊர்களையும் சார்ந்த பலரால் எழுதப்பட்டுள்ளன. எனவே எழுதும் விதத்தில் அடிப்படையில் பெரிய வேறுபாடுகள் அதிகம் காணப்படாவிடினும், எழுதுவோரின் தன்மைக்கேற்ப கையெழுத்து மாறுபாட்டாலும், கல்வி நிலை எழுத்து, சொற்கள், அனுபவம் போன்றவற்றாலும் எழுத்து, சொற்கள் ஆகியவற்றைக் கையாளும் விதத்தில் பலவிதமான வேறுபாடுகளைக் காணமுடிகிறது. இதுபோல பல சொற்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன

எ.கா.

பண்டிதர்	-	சாஸ்திரி
கண்காணி	-	அர்க்கான்
ருத்திரபூமி	-	மயானம்

பொதுவாக, இலக்கியச் சுவடிகளில் காணப்படும் மொழிச் செப்பத்தை இவற்றில் காணமுடியவில்லை. பேச்சு வழக்கில் அமைந்திருக்கும் இந்த ஆவண மொழி நடையில் எழுத்து, சொல், உச்சரிப்பு, எழுத்துமுறை (writing style) ஆகியவற்றில் பிறமொழியின், வட்டார மொழியின் கிளை மொழியின் தாக்கம் மிக இயல்பாக நுழைந்திருப்பதைப் பார்க்க முடிகிறது.

எழுத்து

செங்கற்பட்டு ஆவணங்களில் காணப்படும் மொழி, எழுத்து இரண்டும் தமிழே. எனினும் எழுத்துவடிவில் பிறமொழி எழுத்துவடிவங்கள் கலந்துள்ளன. சிறப்பாக வடமொழி எழுத்துக்களான 'ஸ்ரீ' 'ஷ' 'ஸ' 'ஹ' 'ஜ' 'ஸு' போன்றவை பரவலாகப் பயன்படுத்தப் பட்டிருப்பதை இந்த ஆவணங்களில் காணலாம்.

எ.கா.

ராசஸ்ரீ

ராமஜெயம்

ஸ்தானம்

காணியாஷி

விஷ்ணு பிராமணாள்

தரஶ

ஶசெய

வயணு (வயணம்)

வஶ (வாரம்)

ஈஸ்வரன்

ஸ்ரீஹரி

இவை, பேச்சுவழக்கில் வடமொழியின் தாக்கம் இருந்ததைக் காட்டுவதாக உள்ளன. மேற்கூறியவற்றில் கிரந்த மகரம் தனித்து எழுதப்படும்பொழுது 'ஶ' எனவும் கூட்டெழுத்துக்களாக வரும்பொழுது ஒரு சொல்லின் இடை அல்லது கடை எழுத்துக்களுடன் சேர்த்துப் பின்வருமாறு எழுதப்பட்டிருப்பதையும் காணமுடிகிறது.

பெநூள் (பெருமாள்)

ஸ்ரீ பெநுபுதூர் (ஸ்ரீ பெரும்புதூர்)

கநூன் (கருமான்)

றுசெயு (ராமசெயம்)

பிரமண (பிராமண)

வயணு (வயணம்)

கூபு (கம்பு)

சொல்

வடமொழி எழுத்துக்களையும் மொழியையும் போலவே பிறமொழிச் சொற்களின் கலப்பும் இந்த ஆவணங்களில் இடம் பெற்றுள்ளதைக் காணமுடிகிறது. இவற்றைக் கீழ்கண்ட அட்டவணையில் காணலாம்.

சொற்கள்	மொழி
அர்த்த	
சாஸ்த்திரி	
பூர்வம்	
சர்வ	
ஸ்தானம்	
தோவத்திரா	
ஸ்தலம்	
சொஸ்திரியம்	வடமொழி
சுரோத்திரியம்	
மத்தியம்	வடமொழி
பூச்சியம்	
ஸ்தானிகர்	
அத்தியாபகர்	
மான்யம்	
தேஷ்முக்	
பைராகி	
பஞ்சசால்	
தேஷ்பாண்டே	
ஒக்க	
பெத்து	தெலுங்கு
தும்பால்	

சொற்கள்	மொழி
சவுத்தாய	மராட்டி
அசூரி	
அயன்	
கானுகோயி	
தாலுக்கு	
அமேஷா	
மதுமு	
ருசும்	அரபு மற்று
முகாபலா	
சாதல்வார்	பராசீகக்
பவுஞ்சு	
கசுப்பா	கலப்பு
பேரிசு	
சன்னது	
ராஸ்தா	
தப்ரீக்	
ஜமை	
மிராசு	
ரிக்கார்டுகீப்பர்	
மேஸ்த்தர்	
இஞ்சினீர்	
நெம்பர்	
ரெவு	ஆங்கிலம்
சூன்	
சூலை	ஆங்கிலம்
ஆகஸ்ட்	
செப்டம்பர்	
டிசம்பர்	

பல்லவர்காலம் தொட்டு ஆங்கிலேயர் வருகை வரை இப்பகுதி பலரது ஆட்சியில் இருந்தமை வரலாற்றால் காணலாம். எனவே மொழியில் ஏற்பட்ட பிறமொழித் தாக்கம் இந்த ஆவணங்களிலும் எதிரொலிப்பதையே இது காட்டுகிறது எனலாம்.

உச்சரிப்பு

எழுத்து, சொல் இவ்விரு நிலைகளையும் அடுத்து உச்சரிப்பிலும் வடமொழிக் கலப்பு இருந்திருப்பதை. இந்த ஆவணங்களில் எழுதப்பட்டுள்ள சில சொற்கள் காட்டுவதாக உள்ளன.

எ.கா.

சர்வ	-	சற்வ்வ
தர்ம	-	தற்ம்ம
பிராமணர்	-	பிராம்மணர்

மேற்கூறிய சொற்களில் 'வ' 'ம' ஆகிய எழுத்துக்கள் வடமொழியில் வரும்பொழுது அழுத்தி உச்சரிக்கப்படுவதால் அவற்றைத் தமிழில் எழுதும்போது 'வ்வ' 'ம்ம' என எழுதியிருப்பதிலிருந்து அச்சொற்களின் உச்சரிப்பில் இருக்கக்கூடிய வடமொழித் தாக்கம் எழுத்திலும் பிரதிபலித்துள்ளதை நன்கு உணரலாம்.

வேற்றுமொழி எழுத்துக்களும், சொற்களும் மேற்கண்டவாறு பரவலாகக் கலந்திருப்பினும், சில இடங்களில் அவை முறையாகத் தமிழ்ப்படுத்தப்பட்டு எழுதியிருப்பதையும் காணமுடிகிறது.

எ.கா.

ராமானுஜம்	-	ராமானுசர்
வயிஷ்ணவ	-	வயிட்டணவ
ஜமை	-	சமை
விஷு	-	விய

இது இவ்வாறிருக்க, சில இடங்களில் இது போன்ற திருத்தங்கள் தேவையின்றி தவறாக செய்யப்பட்டுள்ளதையும் காண இயல்கிறது.

எ.கா.

பெத்து	-	பெற்று
சித்தன்	-	சிற்றன்
வயிஷ்ணவ	-	வயிஷ்ட்டணவ
சித்திரபானு	-	சிற்றிரபானு
ஸ்ரீஹரி	-	ஸ்ரீரிகரி

மேலும் சில வேற்றுமொழிச் சொற்கள் கையாளப்படும்பொழுது தமிழில் எழுதுவதைப் போலவே மாற்றி எழுதப்பட்டிருப்பதையும் காணவியல்கிறது. எடுத்துக்காட்டாக 'ஈஸ்வரன்' என்பதை 'மீஸ்பரன்' என்று எழுதியுள்ளதைக் காணமுடிகிறது. தமிழில் எழுதும்பொழுது 'ஈசுவரன்' என்று குறிப்பிடுவதைப்போல 'ஸ' வை 'ஸ' (சு எனும் பொருள்பட) என எழுதியிருப்பதைக் காணமுடிகிறது. இதுபோலவே 'லட்சுமி' என்பது 'லஷ்ஷூமி' என்றவாறும் எழுதப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட இவையனைத்தையும் தவிர பொதுவாக சுவடிகளைப் படிப்பதில் ஏற்படக்கூடிய இடர்பாடுகளான எழுத்து மயக்கம், கால், ரகர வேற்றுமையின்மை, குறில் நெடில் வேற்றுமையின்மை, எழுத்துமிகை, எழுத்துக்குறை ஆகியவற்றை இந்த ஆவணங்களிலும் காணலாம்.

பொதுவாக மற்ற சுவடிகளில் காணப்படுவது போலவே இந்த ஆவணச் சுவடிகளிலும் மெய் எழுத்துக்களுக்குப் புள்ளியில்லை. காலுக்கும் ரகரத்திற்கும் வேற்றுமையில்லை. இச்சுவடிகளில் பெரும்பாலும் 'காலும்' 'ரகரமும்' இணைத்துக்கூட்டெழுத்தாக 'ள' என்று எழுதப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது. இவை மேலோட்டமாகப் பார்க்கும்பொழுது 'ள' என்பது போலத் தோன்றக்கூடும்.

எ.கா.

பிள்ளைய ள (பிள்ளையார்)	-	பிள்ளையன்
பிடாரிய ள (பிடாரியார்)	-	பிடாரியன்
வளம் (வரம்)	-	வளம்

சிலவிடங்களில் இவை வல்லின 'ற' கரம் போலவும் காட்சியளிக்கின்றன. எ.கா. 'தளமமள சா' எனவே இதுபோல வருமிடங்களில் கவனமுடன் படித்தல் அவசியமாகிறது.

இவற்றிற்கடுத்தபடி குறில், நெடில் வேற்றுமையின்மையைக் குறிப்பிடலாம்.

எ.கா.

மேற்கு	-	மெற்கு
தோட்டம்	-	தொட்டம்
கோவில்	-	கொவில்
சேணியன்	-	செணியன்
ஏரி	-	எரி
தேசமுகி	-	தெசமுகி
பேரிசு	-	பெரிசு
மேரை	-	மெரை
கேணி	-	கெணி

இவை தவிர எழுத்துமிகை, எழுத்துக் குறை ஆகியவற்றையும் இச் சுவடிகளில் காணமுடிகிறது.

எழுத்துமிகை

மேன்காவல்	-	மேன்ங்காவல்
சீமை	-	சீர்மை
கந்தப்பர்	-	கந்தப்பார்
தானன்	-	தான்னன்
சைவம்	-	சைய்வம்
பெண்கள்	-	பெண்ங்கள்
ராசஸ்ரீ	-	ராசஸ்த்திரி
பாச்சல்	-	பாச்சால்
ஸ்ரீ	-	ஸ்ரீரி
திருக்கண்சாத்தி	-	திருக்கண்ஞ்சாத்தி

எழுத்துக் குறை

சின்னநயினான்	-	சின்நயினான்
எல்லை	-	எலை
வீரராகவன்	-	வீறாகவன்
தம்பியண்ணன்	-	தம்பியணன்
கிராமநத்தம்	-	கிராமத்தம்

எழுத்து வேறுபாடு

எழுத்துமிகை, எழுத்துக்குறை இவற்றுடன் ஒரு எழுத்திற்குப் பதில் வேறொரு எழுத்தைப் போலியாகப் பயன்படுத்தியிருப்பதைப் பரவலாகக் காணமுடிகிறது.

எ.கா.

இதன்	-	யிதின்
இஞ்சிநிர்	-	யிஞ்சிநிர்
இடையன்	-	யிடையன்
எடையன்	-	யெடையன்
பாச்சல்	-	பாய்ச்சல்
இளந்தோப்பு	-	யிளந்தோப்பு

ஈஸ்வரன்	-	யீஸ்வரன், யீஸ்பரன்
வண்ணான்	-	வன்றான்
தண்ணீர்ப்பந்தல்	-	தன்றிப்பந்தல்
பொன்னி	-	பொன்றி
அண்ணா	-	அன்றா
அனுமார்	-	அன்ரமார்
பலா	-	பிலா
புறம்போக்கு	-	பிறம்போக்கு
புழக்கடை	-	பிழக்கடை
மசூதி	-	மசுவதி, மசுபதி
மேற்கு	-	மேர்க்கு
தெற்கு	-	தெர்க்கு
நாராசம்	-	னாராசம்
நாளில்	-	னாளில்
நாலு	-	னாலு
நாவிதன்	-	னாவிதன்
நந்தன	-	னந்தன
மூர்த்தி	-	மூற்த்தி
ஐயனார்	-	அய்யனார்
தென்னந்தோப்பு	-	தென்னம்தோப்பு
பூந்தோட்டம்	-	பூந்தோட்டம்
குடிகள்	-	குடியள்
பள்ளிகள்	-	பள்ளியள்
வெள்ளாளர்	-	வெள்ளாழர்
வாலாசா	-	பாலாசா
வெள்ளாடு	-	பள்ளாடு
செம்மறிஆடு	-	செம்பிளிஆடு
சுதந்திரம்	-	சுவந்திரம்
வைத்தியர்	-	வயித்தியர்

பைராகி	-	பைராயி
சீர்கருணர்	-	சீர்கறுணர்
பிரபாகர	-	பிறவாகர

மேற்கூறிய எழுத்து வேறுபாடுகள் தவிர பேச்சுவழக்கில் உள்ளதுபோல் பல சொற்கள் எழுதப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது.

எ.கா.

செலவு	-	சிலவு
குளம்	-	கொளம்
கைக்கோளர்	-	கயிக்குளர், கக்குளர்
திருவலகு	-	திருவிலகு
பாளையக்காறர்	-	பாளேகாறர்

எழுத்து மயக்கம்

இவ்வேடுகளில் எழுத்துக்கள் தனியாகவும், கூட்டெழுத்துக்களாகவும், குறியீடுகளைக் கலந்தும் எழுதப்பட்டுள்ளன. இவை எழுதுபவரின் தன்மைக்கேற்ப (Writing Style) பலவிதமாகக் காட்சியளிக்கின்றன. பல இடங்களில் இவை எழுத்து மயக்கத்தை ஏற்படுத்துவதுடன் இவற்றைப் படித்தறிவது மிகக் கடினமாக உள்ளது. பொதுவாக க,ச, த ; ப, ம, வ; ய, எ, ஒ; தி, கி, கு, டு, மு, மூ போன்ற எழுத்துக்கள் ஒப்புமை வடிவமுடையவையாதலால் அதிக மயக்கத்தை ஏற்படுத்துகின்றன. இவற்றைப் போலவே பல குறியீடுகளும் கூட்டெழுத்துக்களும் ஒப்புமை வடிவமுடையன.

எ.கா

உ	-	காணி
ஊ	-	ம (கிரந்தம்)
௱	-	ரா
௱	-	100
ள	-	கலம்
ஞ	-	1/8
ஞ	-	ளம்
வூ	-	1/8
வூ	-	வாரம்
கூ	-	1 கலம்

கள	-	கள்
ஊல	-	லை (எல ஊல)
ஊல	-	வில் (கோ ஊல)
ஹ	-	க்கு
ஹ	-	க்கி
து	-	குப்பம்
து	-	குழி
உ௱	-	200
உ௱	-	ஊள
ழீ	-	மகசூல்
ழீ	-	முதல்

மேற்கூறிய காரணங்களுடன் எழுதுவோரின் தன்மைக்கேற்ப எழுத்துமுறை (style of writing) மாறுபடுவதாலும் மயக்கம் தோன்றுகிறது.

எ.கா.

- சத்தியபிள்ளை
- உக்கிராணம்
- சாலிக்கிராமம்
- நீக்கி வாரப்பத்து
- ஊணய்யர்
- ஆத்துக்கால்
- செங்கல்வறாயனார்
- புலத்துக்கு
- கம்பத்தத்துக்கும்
- கிஷ்ண
- கிராம
- குப்பத்தம் தானியம்
- குழி, குப்பம்
- கார், சம்பா
- மேற்படியில்



- ராமச்சந்திரபிள்ளை
- குட்டி
- வாரத்துக்கு

இதுபோலவே மேலும் பல சொற்களைச் சுட்டலாம். இதுபோன்ற இடங்களில் பாடம் கொள்வது பற்றி ஒருசில உதாரணங்களுடன் இங்கு விளக்கப்படுகிறது.

ஞ'(1/8),'ஞ'(ளம்),'ஞ'(வது) இவை முறையே 'அரைக்கால்','ளம்','பதக்கு' இவற்றைக் குறிக்கும் குறியீடுகளாகும். இவற்றில் முதலில் குறிப்பிடப்பட்டுள்ள இரு குறியீடுகளும் ஒப்புமை வடிவுடையவை. மூன்றாவதாகக் குறிப்பிடப்பட்டுள்ள குறியீட்டின் முறையான வடிவம் '௲' என்பதாகும். ஆயினும் இவை வேகமாக ஓலைகளில் எழுதப்படும்பொழுது 'ஞ' என்பதுபோலத் தோற்றமளிக்கிறது. இதை மேலோட்டமாகப் பார்க்கும்பொழுது '1/8' போலவே தோற்றமளிக்கிறது.

ஆக இம்மூன்று குறியீடுகளும் தனித்தனிப் பொருளை விளக்குவனவாயினும் ஒரே மாதிரி தோற்றமளிப்பவை. இவற்றை அவை இடம்பெறும் இடங்களையொட்டி பொருள்கொள்ள வேண்டும்.

பொதுவாக 'ஞ' (1/8) இந்த ஆவணங்களைப் பொறுத்த மட்டிலும் நில அளவைப்பற்றிக் கூறும்பொழுது 'காணி' அல்லது 'குழி' இவற்றையடுத்து இடம்பெறும் 'ஞ' எனும் குறியீடு 2 மரக்கால் என்பதைக் குறிக்கும். நெல், தானிய அளவினைக் கூறுமிடத்து இது பயன்படுத்தப்படும். ஞ (ளம்) என்பது ளகரமும் கிரந்த மகரமும் இணைந்த கூட்டெழுத்தாகும். இவை குளம், கோவளம் போன்று 'ளம்' என முடியும் சொற்களில் குஞ கோவஞ என்றவாறு எழுதப்பெறும்.

இதுபோலவே 'ஹு' எனும் குறியீட்டையும் குறிப்பிடலாம். இது '1/8' என்பதையும் 'வாரம்' என்பதையும் குறிக்க பயன்படுகிறது. கையெழுத்து மாறுபாட்டினாலும், மிகச் சிறியதாக எழுதப்படும் பொழுதும், தெளிவின்றி 'ணு' என்பது போல பல இடங்களில் எழுதப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது. இது 'ணு' (ணம்) என்பது போல தோற்றமளிக்கிறது.

இவை உடன்வாரம், மேல்வாரம், குடிவாரம் போன்ற சொற்களில் இடம்பெறும் பொழுது உடணம், மேலணம், குடிணம் என தவறாகப் பாடம் கொள்ள நேரிடும். உடன்வாரம் என்பது மொத்தவிளைச்சலையும் (Gross Produce) மேல்வாரம் என்பது அரசு அல்லது நிலச் சொந்தக்காரர்களின் பங்கையும், குடிவாரம் என்பது பயிரிடுபவர்களின் பங்கையும் குறிப்பவை. இங்கு இக்குறியீடுபற்றி மட்டுமல்லாமல் மேற்கூறிய (Revenue) வருவாய் பற்றிய கலைச்சொற்களின் (Technical Terms) பொருள்பற்றிய தெளிவினையும் பெற்றிருத்தல் அவசியம் ஆகிறது.

இதுவரை இந்த ஆவணங்களில் காணப்படும் மொழிநடை, பிறமொழிக்கலப்பு, பேச்சு வழக்குச்சொற்கள், கையெழுத்து வேறுபாடு, எழுத்துமயக்கம் போன்றவை விளக்கப்பட்டன. இனி இந்த ஆவணங்களில் இடம்பெறும் குறியீடுகள் பற்றிக் காணலாம்.

குறியீடுகள்

இந்த ஆவணங்களில் குறியீடுகளும் கூட்டெழுத்துகளும் மிக அதிக அளவில் இடம் பெறுவது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இதுவரை பார்த்த வகையில் சுமார் 100க்கும் மேற்பட்ட குறியீடுகளும், கூட்டெழுத்துக்களும் இடம்பெற்றுள்ளன. அக்காலத்தே வழக்கிலிருந்த நில அளவை, தானிய அளவை, நாணய அளவை, தானியங்களின் பெயர்கள், எண்கள் போன்றவற்றைக் குறிக்கும் குறியீடுகள் அதிகம் பயன்படுத்தப்பட்டுள்ளன.

ஒவ்வொரு கிராமத்தைப் பற்றிய நிலப்பிரிவு மற்றும் நிலப் பயன்பாடு, சாகுபடி, மகசூல், தீர்வை போன்றவை பற்றிய செய்திகளே மீண்டும் மீண்டும் இடம்பெறுகின்றன. தொடரான தகவல்களைத் தரவேண்டியிருப்பதாலும், ஒரே மாதிரியான சொற்களே அதிகம் இடம் பெறுவதாலும், சுருக்கக்குறியீடுகளும், கூட்டெழுத்துகளும் அதிகம் பயன்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

இந்த ஆவணங்களில் இடம்பெறுகின்ற குறியீடுகளையும் கூட்டெழுத்துக்களையும் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

- எண் குறியீடுகள்
- அளவுக் குறியீடுகள்
- சொற்குறியீடுகள் அல்லது சொற் சுருக்கங்கள்
- கூட்டெழுத்துக்கள்

எண் குறியீடுகள்

இந்த ஆவணங்கள் தரம் உற்பத்தி மற்றும் வருவாய் பற்றிய கணக்குகளாக இருப்பதால் எண் குறியீடுகள் அதிகம் இடம் பெறுகின்றன. ஒன்று முதல் ஆயிரம் வரையிலான முழு எண்களும் அரைவீசம், வீசம், மூணு வீசம், அரைக்கால், கால், முக்கால் போன்ற பின்னவெண்களும் அதிகம் இடம் பெறுகின்றன. இந்த ஆவணங்கள் பலரால் எழுதப்பட்டிருப்பதால் கையெழுத்து மாறுபாட்டினால் ஒரே விதமான எழுத்துகளும் குறியீடுகளும் பலவிதமாகத் தோற்றமளிக்கின்றன. காட்டாகச் சிலவற்றைக் குறிப்பிடலாம்.



இவை அனைத்தும் அவ்வவ் வடிவங்களின் வெவ்வேறு தோற்றங்களே அன்றி தனித்தனி வடிவங்கள் எனக் கூறவியலாது.

இவை பதிப்பிற்கு உட்படுத்தப்படும்பொழுது இவற்றின் அடிப்படை வடிவத்தை ஆதாரமாகக் கொண்டு நிலைப்படுத்துதல் (Standardise) மிகவும் அவசியமாகிறது. பொதுவாக இதுபோன்ற ஆவணங்களை ஆய்வாளர்கள் முறையாகப் பயன்படுத்தவும், ஆய்வாளர்கள் பயன்படுத்தும் விதமாக இவற்றைப் பதிப்பித்தற்கும், குறியீடுகள் பற்றிய தெளிந்த அறிவு இன்றியமையாததாகின்றது.

குறியீடுகள் பற்றிய தனி நூல்கள் எதுவும் இல்லை எனினும் பின்வரும் நூல்கள் குறியீடுகள் பற்றி அறிந்துகொள்ள பெரிதும் துணை செய்கின்றன.

கணித நூல்களான கணக்கதிகாரம், ஆஸ்தான கோலாகலம் மற்றும் எண்சுவடி ஆகியவை வாயிலாக எண்கள், அளவை பற்றிய குறியீடுகளை அறிந்து கொள்ளலாம்.

கல்வெட்டு மற்றும் செப்பேட்டு நூல்கள், எழுத்து வளர்ச்சி பற்றிய நூல்கள், கட்டுரைகள் போன்றவற்றில் எண்கள், அளவை தவிர வேறு பல குறியீடுகளையும் காணலாம்.

'அறுவகை இலக்கணம்' எனும் இலக்கண நூலில் எழுத்திலக்கணத்தில் எழுத்துக்களின் வரிவடிவம் பற்றிக் கூறும்பொழுது அலகெழுத்துக்கள், கூட்டெழுத்துக்கள், குறிப்பெழுத்துக்கள் ஆகிய தலைப்புகளின்கீழ் குறியீடுகள் பற்றியும் கூறப்பட்டுள்ளன.

முன்னால் கூறப்பட்ட இருவகை நூல்களும் குறியீடுகளைப் பயில்வோருக்கு பெரும்பாலும் அறிமுகமானவையே. ஆனால் அறுவகை இலக்கணம் போன்ற ஒரு இலக்கண நூலில் குறியீடுகளின் வரிவடிவம் பற்றிக் கூறியிருப்பது மிகவும் புதுமையாகவும், சிந்தனைக்குரியதாகவும் பதிப்பு நோக்கில் பயன்தரத்தக்கதாகவும் உள்ளது.

அறுவகை இலக்கணம் எனும் இலக்கணநூல் 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வண்ணச்சரபம் தண்டபாணிசுவாமிகளால் இயற்றப்பெற்றதாகும். மற்ற இலக்கண நூல்களில் காணப்படும் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி இவற்றோடு புலமை இலக்கணம் எனும் புதுமை இலக்கணத்தையும் புகுத்தி அறுவகை இலக்கணமாக இந்நூலை அளித்திருப்பது இதன் தனிச் சிறப்பாகும்.

உயிர், ஆய்தம், மெய், உயிர்மெய் ஆகிய நால் வகை எழுத்துக்களுக்கேயன்றி கணிதத்தில் பயன்படும் அலகெழுத்துக்கள், எழுத்துச் சுருக்கத்தின்பொருட்டு ஆளப்படும் கூட்டெழுத்துக்கள் குறிப்பெழுத்துக்கள் ஆகியவற்றின் வரிவடிவையும் இந்நூலின் எழுத்திலக்கணம் காட்டுகிறது.

இந்நூலில் குறியீடுகள் பற்றி அலகெழுத்துக்கள், குறிப்பெழுத்துக்கள், கூட்டெழுத்துக்கள் ஆகிய தலைப்புகளில் 23 நூற்பாக்கள் இடம்பெறுகின்றன. எண்கள், அளவை பற்றிய குறியீடுகளை அலகெழுத்துக்கள் எனவும் ஒரு சொல்லாகப் படிக்கப்படும் குறியீடுகளைக் கூட்டெழுத்துக்கள் எனவும், ஒன்றை

உணர்த்துவதற்காகப் பயன்படும் வெறும் குறியீடுகளைக் குறிப்பெழுத்துக்கள் எனவும் இந்நூலாசிரியர் வகைப்படுத்தியுள்ளார்.

மேலும் ஒவ்வொரு தலைப்பின் கீழும் இடம்பெறும் குறியீடுகளைப் பற்றிக் கூறும்பொழுது முதன்மைக் குறியீடுகளை மட்டும் குறிப்பிட்டு அவற்றின் கூட்டாக வரும் ஏனைய குறியீடுகளை விரித்துக் கூறாது சென்றிருக்கிறார். சில குறியீடுகளைப் பொருந்தாக் கூட்டு எனவும் குறிப்பிடுகிறார்.

இந்நூலாசிரியர் குறியீடுகளை வகைப்படுத்தியுள்ள விதம், அவற்றில் முக்கியமானவற்றைப் பற்றியே கூறியுள்ள விதம், பொருந்தாக் குறியீடுகளைச் சுட்டிக்காட்டியிருக்கும் விதம் ஆகியவற்றைக் கூர்ந்துநோக்கும்பொழுது இவை குறித்து ஆசிரியர் கொண்டிருந்த தெளிவு நன்கு புலப்படுகிறது.

மேலும், குறியீடுகளின் வடிவம் பற்றிக் கூறுவதில் இவரது தெளிவான அணுகுமுறை பதிப்புநோக்கில் மிகவும் பயனுடையதாம். இவர் ஒவ்வொரு அலகிற்கும் ஒரு வடிவையே காட்டுகிறார். பொதுவாகப் பதிப்பு நூல்களில் கூட ஒரு குறியீட்டுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட வடிவங்கள் காட்டப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது.



இவற்றைக் கூர்ந்து நோக்கும்பொழுது அடிப்படை வேறுபாடுகள் இவற்றில் இல்லை என்பது புலப்படும். 'வ' 'ச' இவ்விரு வடிவங்களின் கூட்டே 'வூ' ஆகும். 'ஷ' என்னும் வடிவம் 'வ' ன் ஒரு பகுதியாகிய 'எ' உடன் 'ச' என்பதை இணைத்து 'ஷ' என்றவாறு எழுதப்படுகிறது. அதுபோலவே அரைவீசமும், அரைவீசம் மாகாணி என்றும் அழைக்கப்படும். 'ம' என்பதன் வடிவான 'ப' வும் காணியின் வடிவான 'ஓ' யும் இணைந்த கூட்டே 'பஓ' ஆகும். இவை இணைத்து எழுதப்படும்பொழுது 'ல', 'ப' என்றவாறும் தனியே எழுதப்படும்பொழுது 'பஓ' எனவும் எழுதப்பட்டு மூன்றுவிதமாக பதிப்பு நூல்களில் காணப்படுகின்றன.

உண்மையில் இவற்றைத் தனித்தனி வடிவங்களாகக் கருதுதல் முறையாகாது. இக்குறியீடுகளின் ஒரே வடிவம் எழுதுபவர், எழுதுபொருள் இவற்றின் தன்மைக்கேற்ப பலவிதமான தோற்றங்களையளித்து அவ்வவ்வாறே பதிப்பு நூல்களிலும் இடம்பெற்றுவிட்டதையே இது காட்டுகிறது.

இதுபோலன்றி அறுவகை இலக்கண ஆசிரியர் குறியீடுகள் அனைத்தையும் கூர்ந்து நோக்கி அவற்றை நிலைப்படுத்தி சிறப்பாகவும், தெளிவாகவும், பொருத்தமாகவும் தோன்றும் வடிவங்களையே கொடுத்திருக்கின்றார்.

அறிவியல் நோக்கோடு (*Scientific Approach*) அணுகப்படும் ஆய்வுகளுக்குத் துணைசெய்யும் வகையில் சிறந்த எழுத்துவடிவக் காப்பாக திகழும் இவ்வறுவகை இலக்கணம், குறியீடுகள் பற்றிய ஆய்வை மேற்கொள்வோர்க்கும், முதன்மைச்

சான்றுகளான கல்வெட்டு செப்பேடு, ஆவணச் சுவடிகள் இவற்றை ஆதாரமாகக் கொண்டு ஆய்வை மேற்கொள்ளும் வரலாற்றாய்வாளர்க்கும், குறியீடுகள் அதிகம் இடம்பெறக்கூடிய நூல்களை பதிப்பிப்போர்க்கும் சிறந்த வழிகாட்டியாக விளங்கும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை.

இவ்வடிப்படையில் செங்கற்பட்டு ஆவணங்களில் காணப்படும் குறியீடுகள் ஆய்விற்குட்படுத்தப்பட்டு, வகைப்படுத்தி பின்னிணைப்பில் கொடுக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

இந்த ஆவணங்களில் இடம்பெறும் எண் குறியீடுகளைப் பொறுத்தமட்டிலும் ஒன்றிலிருந்து 100 வரையுள்ள எண்களில் அடிப்படை வேறுபாடு எதுவுமில்லை. ஆனால் ஆயிரம் என்பதைக் குறிக்கும் எண்குறியீடு கூ,த ஆகிய இருவித வடிவங்களில் காணப்படுவது சிந்தனைக்குரியதாக உள்ளது. பொதுவாக, ஓராயிரம் என்று வருமிடங்களில் 'கூ' எனும் குறியீடும் ஒன்றுக்கு மேற்பட்ட ஆயிரங்கள், அதாவது, 2000, 3000, 4000 எனத்தொடங்கும் இடங்களில் 'த' எனும் வடிவமும் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது.

ஆயிரத்துக்கு அடுத்தபடியாக எண்குறியீடுகளில் குறிப்பிடப்பட வேண்டியவை அரைக்காலும், அரைவீசமும் ஆகும். இவ்விரு குறியீடுகளும் இருவிதமாக எழுதப்பட்டுள்ளன. இவற்றுள் அரைக்கால் பற்றி முன்பே கண்டோம்.

அரைவீசம் என்பது 1/32ஐக் குறிக்கும் குறியீடாகவும் இது 'சு' 'சூ' என இருவிதமாக இந்த ஆவணங்களில் எழுதப்பட்டுள்ளது. இதுகுறித்து சிந்திக்கும்பொழுது 'ச' மற்றும் 'ப஖' இவற்றின் கூட்டே இக்குறியீடு என்பது புலப்படுகிறது. வீசம் என்பது 'ப' '஖' ஆகிய இரு எழுத்துக்களின் கூட்டாகும். ஆக 'ப஖' ன் முதல் எழுத்தாகிய 'ப' உடன் 'ச' 'இணையும் பொழுது 'சு' எனும் வடிவையும், கடை எழுத்தாகிய '஖' உடன் இணையும்பொழுது 'சூ' எனும் வடிவையும் பெறுகிறது. இவையே இந்த ஆவணங்களில் இடம்பெறும் எண் குறியீடுகளில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை.

முழு எண்களில் ஒன்று முதல் ஆயிரம் வரையுள்ள எண்களும் இந்த ஆவணங்களில் பயன்படுத்தப்பட்டிருப்பினும் இவற்றில் முதன்மைக் குறியீடுகளே பின்னிணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன. ஏனையவை இவற்றின் கூட்டாக வருவதால் அவை பின்னிணைப்பில் கொடுக்கப்படவில்லை. காட்டாக ¾ (முக்கால்) என்பது முதன்மைக் குறியீடாகும். 7/8 (முக்காலேயரைக்கால்) என்பது முக்கால், அரைக்கால் இவற்றின் கூட்டாகையால் இவை தனியே பின்னிணைப்பில் குறிப்பிடப்படவில்லை.

அளவைக் குறியீடுகள்

நெல் மற்றும் தானியங்கள் கலம், மரக்கால், படி ஆகிய அளவையால் அளக்கப்பட்டதால் உரி (1/2படி) யில் தொடங்கி 1 கலம் வரையிலான அளவைக் குறியீடுகள் இந்த ஆவணங்களில் இடம்பெறுகின்றன. இவற்றில் முதன்மைக் குறியீடுகள் மட்டும் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளன. ஏனைய குறியீடுகள்

இவற்றின் கூட்டாக வருவதால் அவை குறிப்பிடப்படவில்லை.

ஆயிரத்தைப்போலவே கலம் என்பதைக் குறிக்கவும் இருவகைக் குறியீடுகள் இந்த ஆவணங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன. 'ണ' என்பதே களத்தின் அடிப்படைக் குறியீடாகும். இது ஒரு கலம் எனக் குறிப்பிடுமிடத்து 'க' உடன் இணைந்து '**கூ**' என்றவாறு எழுதப்பட்டுள்ளது. மற்ற இடங்களில் 'ണ' என்றே எழுதப்பட்டுள்ளது.



(உள்ளாவூர் - ஏடு-24)

இவை ஒன்றிரண்டு இடங்களில் மட்டுமின்றி இந்த ஆவணங்கள் முழுவதிலும் இவ்வாறே காணப்படுகின்றன. இதிலிருந்து 'ണ' 'என்பதே கலத்தின் குறியீடு என்பது தெளிவாகிறது. இதை அரண் செய்வது போல அறுவகை இலக்கணமும் 'ள கரமே கலம்' (நூற்பா-40) என்று கூறுவது சிறப்பாகக் கருதத்தக்கதாம். கெட்டி எண் சுவடியிலும் கலத்திற்கு '**கூ**' எனும் குறியீடே கொடுக்கப்பட்டுள்ளது. வின்சுலோ அகராதியும் **கூ**' என்பதை 'ஒரு கலம்' என்றே குறிப்பிடுகிறது.

கலத்தை அடுத்த அளவுக்குறியீடுகளில் குறிப்பிடத்தக்கவை '**ஷு**' மற்றும் '**ஷ**' ஆகியவையாகும். இவை முறையே 2 மரக்கால் 8 மரக்கால் ஆகியவற்றைக் குறிப்பவை. இவை சிலவிடங்களில் கையெழுத்து தெளிவின்மை காரணமாகவும் மிகச் சிறியதாக எழுதப்படும்பொழுதும் தெளிவின்றி '**ஜ**' '**ஜெ**' போலத் தோற்றமளிக்கின்றன. இவை முறையே **ஜ** (1/8) **ஜெ** (¾) ஆகியவற்றின் தோற்றத்தை ஒத்திருப்பதால் மயக்கத்தை ஏற்படுத்துகின்றன. எழுத்து மயக்கம் பொருள் வேறுபாட்டை அளிப்பது போல குறியீட்டு மயக்கமும் பாடவேறுபாட்டைத் தோற்றுவிக்கக்கூடும். இதனைப் பின்வரும் எடுத்துக்காட்டின் வாயிலாக விளக்கலாம்.

கணக்கதிகாரத்தில் (சர்க்குணா நிதியச்சுக்கூடப் பதிப்பு) நெல்வாய்த்தானம் பற்றிக் கூறும்பொழுது "நெல்வாய்த்தானம் - ஏழாவன ஜூ - ஷு - ஜெ - ௨ - ங - த - கூ யுதூ எ"

இதில் இரண்டாவதாக வரும் குறியீடு 'பதக்கு' என்பதைக் குறிப்பதாகும். இது இந்த இடத்தில் வருவது பொருத்தமற்றது. இங்கு '**ஜ**' (ஆழாக்கு) என்று வருதலே சரியானதாகும். நெல்வாய்த்தானம் கூறும்பொழுது செவிடு, ஆழாக்கு, உழக்கு, நாழி, குறுணி, தூணி, ஒரு கலம் என வருதலே சரியானதாகும். அதைவிடுத்து '**ஜ**' (ஆழாக்கு) வரவேண்டிய இடத்தில் '**ஷு**' (பதக்கு) என குறிப்பிடப்பட்டிருப்பது குறியீட்டு மயக்கத்தினால் ஏற்பட்ட விளைவாகக் கருதலாம். ஆழாக்கு என்பதன் குறியீடு அரைக்காலின் குறியீட்டை ஒத்தாகும். பதக்கும், அரைக்காலும் அதிக வேற்றுமையின்றி எழுதப்படுவதால் மேற்கூறிய எடுத்துக்காட்டில் வருவதுபோல

பாடவேறுபாடுகள் தோன்றக்கூடும்.

இதுபோன்ற இடங்களில் அவை வருமிடங்களையொட்டி பொருள் கொள்ளுதல் அவசியமாகிறது. செங்கற்பட்டு ஆவணங்களைப் பொறுத்தமட்டிலும் தானியங்களின் அளவைக் கூறுமிடத்துக் கலம் என்பதைத் தொடர்ந்தே பதக்கு இடம்பெறும். ஆகவே பொருளுணர்ந்து இவற்றைப் படிக்கும்பொழுது பாடவேறுபாடு ஏற்பட வழியில்லை. எனினும், மேலோட்டமாக பார்க்கும்பொழுதும், பொருள் புரியாது பார்க்கும்பொழுதும் இதுபோன்ற வேறுபாடுகள் எழ வாய்ப்பிருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுவதற்காகவே இங்கு இவை குறிப்பிடப்பெற்றன.

இதுபோலவே ங (குறுணி) ஙு (முக்குறுணி) ஆகிய குறியீடுகளும் மயக்கத்தை ஏற்படுத்துவன. இவை ஒப்புமை வடிவமுடையவை ஆகையால் மயக்கத்தைத் தருவன. இவை பலவிடங்களில் வேறுபாடின்றி எழுதப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது. இதுபோன்ற இடங்களில் இவற்றைக் கணக்கிட்டு கூடுதலைச் சரிபார்ப்பதன் மூலம் சரியான பாடத்தைக் கொள்ளவியலும் மேலும், உ(நாழி) யின் குறியீடும் இரண்டின் குறியீட்டை ஒத்திருத்தல் மயக்கத்தைத் தரக்கூடும்.

சொற் குறியீடுகள்

சொற் குறியீடுகள் என்பன நீளமான ஒரு சொல்லைச் சுருக்கம் கருதி முதல் எழுத்தை மட்டுமோ அல்லது முதல் மற்றும் கடை எழுத்தையுமோ, முதல், இடை, கடை எழுத்துக்களைச் சேர்த்தோ குறிப்பாக உணர்த்தும் குறியீடுகளாம். ஆங்கிலத்தில் உள்ள *verses - VS., Manuscripts - MSS, Standard - STD* போன்றவை இவை. எடுத்துக்காட்டாக பின்வரும் சிலவற்றைக் காணலாம்.

௵	-	வருடம்
௴	-	மாதம்
௱	-	பிழக்கடை
சீ	-	சில்லரை
௸	-	மேரை

இவற்றில் வருடம் என்பதன் முதல் இரு எழுத்துக்களான 'வரு' உடன் கடை எழுத்தாகிய மகரம் (கிரந்த மகரம் - ஶ) இணைந்து ௵ என்றவாறு எழுதப்பட்டுள்ளது. இதுபோலவே மாதம் என்பதிலும் 'ம்' உடன் கடை எழுத்தின் ஶ (ம்) சேர்க்கப்பட்டு 'மஶ' என எழுதப்பட்டு நாளடைவில் '௴' என்றாகியது. பிழக்கடை, சில்லரை, மேரை ஆகிய சொற்களில் அவற்றின் முதல் எழுத்துக்கள் மட்டும் காட்டப்பட்டுள்ளன.

இதுபோல ஆய்விற்கெடுத்துக்கொண்ட 10 கிராமங்களில் ஆவணங்களிலிருக்கக்கூடிய சொற்குறியீடுகள் அனைத்தும் பின்னிணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

சொற்குறியீடுகளைப் பொறுத்தவரையிலும் இவை இப்படித்தான் அமையவேண்டும் என்று வரையறுக்கவியலாது. அவை எவ்வெவ்வாறு சுவடிகளில் இடம்பெறுகின்றனவோ அவ்வவ்வாறே பதிப்பிலும் இடம்பெறுதலே சிறப்பாகும். சில இடங்களில் ஒரே மாதிரியான குறியீடு இருவித சொற்களுக்கும் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது.

எடுத்துக்காட்டாக 'கூ' எனும் குறியீடு பொதுவாக 'காசு' என்பதைக் குறிக்க இந்த ஆவணங்களில் பயன்படுத்தப்படுகிறது. இதே குறியீடு சில இடங்களில் காணியை எழுத்துக் குறியீடாகக் குறிக்கிறது. காசு, காணி ஆகியவற்றின் முதல் எழுத்தான 'கா' வை அடிப்படையாகக் கொண்டே இக் குறியீடு எழுதப்பட்டிருப்பதால் இவை இரண்டும் ஒன்றாக உள்ளது. இதுபோலவே 'தூ' எனும் குறியீடும் குடிசை, குழி, குடி ஆகியவற்றைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே ஒரு குறியீடு ஒரு பொருளை மட்டுமே குறிப்பதாக இங்கு கொள்ளவியலாது. இடத்திற்கேற்ப இவற்றின் பொருளை அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

ஒருசில சொற்குறியீடுகள், எண் குறியீடுகள், கூட்டெழுத்துக்களை ஒத்தும் காணப்படுகின்றன.

எ.கா.

வு	-	வாரம், 1/8
வ	-	வரு, வரகு
சூ	-	தானியம், தம், கம்

இங்கு 'வு' என்பது வாரம் எனும் சொல்லைக் குறிப்பதாகும், வா + ர + ம் மூன்றும் இணைந்த வடிவமே இக் குறியீடாகும். எண் குறியீடாகிய அரைக்காலும் ('வு') இதே வடிவத்தைக் கொண்டிருப்பது இங்கு கவனிக்கத் தக்கதாம். காலில் (வ) அரைப்பகுதி (ப) அரைக்கால் என்ற அடிப்படையிலேயே இது இவ்வடிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

இதுபோலவே 'சூ' எனும் குறியீடு தானியம் என்பதைக் குறிப்பதாக தானியம் என்பதன் முதல் மற்றும் கடைஎழுத்தின் கூட்டாகும். 'தம்' 'கம்' ஆகிய கூட்டெழுத்துக்களுக்களும் இதே வடிவைப் பெற்றிருப்பதால் இம்மூன்றும் ஒன்றுபோல தோற்றமளிக்கின்றன.

அடுத்து 'வ' என்பதைக் குறிப்பிடலாம். இது வரகு என்பதைக் குறிப்பது. சிலவிடங்களில் 'வ', 'ரு' ஆகிய எழுத்துக்களும் சேர்ந்து எழுதப்படும்போது இதே தோற்றத்தை ஒத்துக் காணப்படுகிறது. (உ.ம். வம்படி)

இதுபோல பல குறியீடுகளும் கூட்டெழுத்துக்கும் ஒப்புமை வடிவைப் பெற்றிருப்பதால் மயக்கத்தை ஏற்படுத்தும் வாய்ப்புகள் அதிகம் இருக்கின்றன. இது போன்றவிடங்களில் பொருள் உணர்ந்து, அவை வரக்கூடிய இடங்களையொட்டிப் பொருள்கொள்ள வேண்டும்.

கூட்டெழுத்துக்கள்

கூட்டெழுத்துக்கள் என்பது ஒரு சொல்லாகப் படிக்கப்படாமல் வெறும் எழுத்துக்களின் கூட்டாக வரக்கூடியவை கூட்டெழுத்துக்கள் வரையறைப்படுத்தப்பட்டு பின்னிணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

இவற்றிலும் ஒப்புமை வடிவுடைய எழுத்துக்களும், மிகச்சிறய வேறுபாடுகள் உடைய எழுத்துக்களும் காணப்படுகின்றன.

எ.கா.

ஃபு	-	கம், க்கம், த்தம்
௵	-	க்கி
௵	-	க்கு
௵ᐟ	-	க்கில்
௵ᐟ	-	க்கும்